(2) உடுக்குறியிடாத வினாக்கள்.

Electric Bill Collection.

4 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that bills are pending collection for many months in various Revenue Units of the Tamil Nadu State Electricity Board;

(*b*) if so, the total amount involved on pending bills of over three months as on 31st October 1977; and

(*c*) the action proposed to be taken by the Government in the matter?

விடை.—(அ) ஆம்.

(இ) சுமார் ரூ. 2 கோடி.

(உ) விவசாயிகளின் போராட்டமே மின் கட்டண வசூலில் ஏற்பட்ட தாமதத்திற்கு முக்கிய காரணமாகும். விவசாயிகளின் மனுக்களைப் பரிசீலிக்க அரசு ஏற்கனவே ஒரு குழுவை நியமித்துள்ளது. 1—3—1977 முதல் 30—11—1977 வரையிலுள்ள நிலுவைகள் குழுவின் பரிந்துரைகள் பெறப்பட்ட பின்பு வசூலிக்கப்படும்.

நூலக வரி.

52.—திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971 முதல் 1976 வரையில் நூலக வரியாக ஆண்டுதோறும் வசூலான தொகை எவ்வளவு?

(இ) மேற்குறித்த ஆண்டுகள் ஒவ்வொன்றிலும் (i) நூல்கள் வாங்கவும், (ii) நூலகங்களை நிர்வகிக்கவும், (iii) புதிய நூலகங்களை ஏற்படுத்தவும், செலவிட்ட தொகை எவ்வளவு?

(உ) நூலக வரி வருமானத்தில் செலவு போக எஞ்சியுள்ள தொகை ~~அற்றை~~ எவ்வளவு?

[1978 மார்ச் 2

(அ)

ஆண்டு.	1971 முதல் 1976 வரை வசூலான நூலக வரி.	
	தொகை.	
	ரூ.	பை.
1971–72	38,47,061	63
1972–73	45,12,452	79
1973–74	58,38,176	90
1974–75	53,44,988	36
1975–76	59,55,242	80

(இ) (1) நூல்கள் வாங்க செலவிட்ட தொகை.

ஆண்டு.	தொகை.	
	ரூ.	பை.
1971–72	14,48,573	38
1972–73	17,05,643	03
1973–74	19,86,632	51
1974–75	20,23,415	83
1975–76	12,12,925	40

(2) நூலகங்களை நிர்வகிக்க செலவிட்ட தொகை.

ஆண்டு.	தொகை.	
	ரூ.	பை.
1971–72	94,01,324	49
1972–73	98,06,627	78
1973–74	1,11,68,414	08
1974–75	1,13,22,078	94
1975–76	1,25,99,083	16

(3) புதிய நூலகங்களை ஏற்படுத்த செலவிட்ட தொகை.

ஆண்டு.	தொகை.	
	ரூ.	பை.
1971–72	372	58
1972–73	11,471	96
1973–74	..	..
1974–75	..	..
1975–76	..	..

[1978 மார்ச் 2

சென்னை நூலக ஆணைக்குழுவில் மட்டுமே மேற்கண்ட இனத்தில் செலவு செய்யப்பட்டுள்ளது.

(உ) ஏதுமில்லை. நூலக வரியாக கிடைக்கும் வரவைக் காட்டிலும் ஏற்படும் அதிகப்படியான செலவினங்களை ஈடுகட்ட, அரசின் நூலக வரி இணைமானியம், பராமரிப்பு மானியம், இதர வரவினங்கள் போன்றவைகளை அந்தந்த நிதியாண்டில் வசூலான நூலக வரியுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதால் நூலகவரி வருமானத்தில் மிஞ்சிய தொகை ஏதுமில்லை.

மாண்புமிகு மேலவைத் **துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

(1) மதுரைப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் போடாத காரணத்தால் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து.

மாண்புமிகு மேலவைத் **துணைத் தலைவர்:** திரு. வே. தங்கப்பாண்டியன் அவர்கள், மதுரைப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் பதவிக் காலம் முடிந்து, புதிய துணை வேந்தர் அங்கு போடாத காரணத்தால் அந்தப் பல்கலைக் கழகத்தில் ஏற்பட்டுள்ள நிர்வாகச் சீர்கேடு, பரபரப்பு, பதட்ட நிலை குறித்து விவாதிக்க இந்த அவையை ஒத்தி வைக்க வேண்டும் என்று கோரியுள்ளார்கள். இது, எந்த வகையில் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குட்பட்டது என்பதைச் சுருக்கமாக விளக்கக் கோருகிறேன்.

3. தகவல் கோரல்.

இஸ்மாயில் கமிஷன் அறிக்கை குறித்து.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, விதி 57 " Any member desirous of raising a discussion on an urgent matter of administration or public importance .... " என்று கூறுகிறது. நேற்றைய தினம் ஜஸ்டிஸ் இஸ்மாயில் கமிஷன் அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி விவாதிக்க இந்த அவையில் ஒரு அரை மணி நேரம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் இதை இங்கே எழுப்புவதற்குக் காரணம் இன்று கடைசி நாளாக இருப்பது தான்.